# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. STC 1694/2024

Prosecution Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணசாமி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.உஷாபாய் | Calling | : கட்டுமான தொழில் |
| Village | : கெட்டிமல்லன்புதூர் | Religion | : |
| Taluk | : | Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of March 2026.

(1 முதல் 4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை:-

1. நான் தற்போது கெட்டிமல்லன்புதூரில் குடியிருக்கிறேன். நான் கட்டுமான தொழில் செய்து வருகிறேன். கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக பாராளுமன்ற தேர்தலின்போது ஓட்டு மையத்தின் அருகே பிரச்சனை நடந்தது. நான் சென்றபோது கூட்டமாக இருந்தார்கள். மின் இணைப்பு தடை செய்யப்பட்டிருந்தது.இருட்டில் யார் என்னை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் நான் மருத்துவமனையில் இருந்தபோது புகாரை வாக்குமூலமாக பெற்றுக்கொண்டார்கள். புகார் **அசாஆ 1** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது.) இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து அனுமதி அளிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-

2, கடந்த 19.04.2024 அன்று இரவு 10.00 மணியளவில் கெட்டிமல்லன்புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அருகே ஆஜர் எதிரிகள் ஓட்டுக்கு பணம் கொடுக்க வந்ததாகவும், அதை நான் வாங்க மறுத்தால் எதிரிகள் என்னை ஆபாசமாக பேசி அடித்து காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலீசார் விசாரணையின்போது கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை

மறுவிசாரணை : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.